**கணினி வழி தேர்வு முறையில் தேர்வர்கள் பின்பற்றப்பட வேண்டிய முக்கிய குறிப்புகள்**

**---**

- தேர்வர்கள்அனுமதி சீட்டினை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து எடுத்துவருதல் வேண்டும்.
- மாற்றுத் திறனாளி தேர்வர்கள் தம்முடைய மாற்றுத் திறனாளி சான்றும் உடன் எடுத்துவருதல் வேண்டும்.
- தேர்வர்கள் கட்டாயமாக அனுமதிச் சீட்டினை தேர்வு அறைக்கு கொண்டு வரவேண்டும். அனுமதிச் சீட்டு இல்லாத தேர்வர்களின் நுழைவு மறுக்கப்படும். நுழைவுச் சீட்டில் அச்சிடப்பட்டுள்ள புகைப்படமும் தேர்வர் ஒட்டியுள்ள புகைப்படமும் ஒத்து இருந்தால் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.
- தேர்வர்கள் கீழே குறிப்பிடப்பட்டவற்றுள் ஏதேனும் ஒரு புகைப்பட அடையாள அட்டையின் அசலினை எடுத்துவருதல் வேண்டும்.
  1. தேர்தல் அடையாள அட்டை (Voter ID)
  2. பாஸ்போர்ட் (Passport)
  3. Pan Card
  4. Driving Licence
  5. Aadhar Card

  மேலே குறிப்பிடப்பட்டுள்ள புகைப்பட அடையாள அட்டை ஏதேனும் ஒன்றை எடுத்துவர தவறும்பட்சத்தில் அந்தத் தேர்வர் தேர்வு எழுத அனுமதி அளிக்கப்படமாட்டாது.
- தேர்வு அனுமதிச் சீட்டு மற்றும் புகைப்பட அடையாள அட்டை மட்டுமே தேர்வு மையத்திற்குள் எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்படும்.
- தேர்வு மையத்தின் மையக் கதவுகள் மூடும் நேரத்திற்குப் (9.15 am) பின் வந்தால் தேர்வர்கள் நுழைய அனுமதி மறுக்கப்படுவர்.
- தேர்வு அனுமதிச் சீட்டினை தேர்வு மையத்திலேயே தக்கவைத்துக்கொள்ளப்படும். தேர்வர்களின் எதிர்கால தேவைக்கு அனுமதிச்சீட்டினை பிரதி எடுத்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- தேர்வர்கள் தடைசெய்யப்பட்ட பொருட்களையோ அல்லது விலையுயர்ந்த பொருட்களையோ தேர்வு மையத்திற்கு எடுத்துவருதல் கூடாது. அத்தகைய பொருட்களுக்கு தேர்வு மையம் பொறுப்பாகாது.
- ஆசிரியர் தேர்வு வாரியத்தால் அளிக்கப்பட்ட தேர்வர்களுக்கான முக்கியக் குறிப்புகளை பின்பற்றாமல் செயல்படுபவர்கள் தேர்வு எழுத அனுமதி மறுக்கப்படுவதுடன் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.